DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **S.C.No. 17 of 2020** |
| **Deposition of witness for** | **:** | **PW- 5** |
| **Name** | **:** | தனலட்சுமி |
| **Father's/Husband Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Address** | **:** | |
| **Village** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**25.6.2025**

**முதல் விசாரணை :**

நான் J கொலக்கம்பையில் குடியிருக்கிறேன், நான் கூலி வேலை செய்கிறேன், இவ்வழக்கில் இறந்துபோன பழனிசாமியை தெரியும், நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் 1ஆம் எதிரி மகாதேவன், 2ஆம் எதிரி நவீன் மற்றும் 3ஆம் எதிரி ரமேசை தெரியும். நான் தோட்டத்து வேலைக்கு போய்விட்டு சாயந்தரம்தான் வந்தேன், அதனால் இந்த வழக்கு சம்பந்தமாக என்ன நடந்தது என்பது எனக்கு தெரியாது. பழனிசாமி செத்துவிட்டார் என்பது தெரியும், அந்த சாவுக்கு போனேன்.

பழனிசாமி எதனால் இறந்தார் எப்படி இறந்தார் என்பது எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத நீதிமன்றத்தில் அனுமதி கோரி அதற்கு நீதிமன்றம் அனுமதி அளித்ததன் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**</u>:

17.9.2019ஆம் தேதி மாலை சுமார் 4.00 மணிக்கு நான் வேலை முடித்து வீட்டுக்கு வந்துகொண்டு இருந்தபோது விநாயகர் கோவில் பக்கத்தில் இறந்துபோன பழனிசாமி குடும்பத்திற்கும், 1ஆம் எதிரி மகாதேவன், 2ஆம் எதிரி நவீன்குமார், 3ஆம் எதிரி ரமேஷ் ஆகியோருக்கும் தகராறு நடந்து கொண்டிருந்ததை நான் பார்த்தேன் என்றும், அப்போது பழனிசாமி 1ஆம் எதிரி மகாதேவனை பார்த்து சித்ராவை எப்படி ஊருக்கு அனுப்பலாம், அவ என் பொண்டாட்டியா அல்லது உன் பொண்டாட்டியா என்று கேட்டதாகவும், அதற்கு 1ஆம் எதிரி மகாதேவன் பழனிசாமியோட இடது கன்னத்தில் அறைந்து அவனை கீழே தள்ளிவிட்டார் என்றும், பழனிசாமி கீழே கல் மீது விழுந்து அவன் வலது காதுக்கு கீழ் அடிப்பட்டது என்றும், 1ஆம் எதிரி மகாதேவன் பழனிசாமியை கொலை செய்வதாக மிரட்டி வயிற்றில் காலால் எட்டி உதைத்ததாகவும், அப்போது மகாதேவனை பழனிசாமியின் அண்ணன், அப்பா, அம்மா எல்லோரும் பிடித்துக்கொண்டார்கள் என்றும், அப்போது 2ஆம் எதிரி நவீனும், சித்ராவின் அண்ணனான 3ஆம் எதிரி ரமேசும்

கீழே கிடந்த பழனிசாமியை காலால் மாறி மாறி உதைத்தார்கள் என்றும், அதை நானும், பழனிசாமி குடும்பத்தாரும் சமாதானம் செய்து அனுப்பி வைத்தோம் என்றும், போலிசார் விசாரணையில் நான் சொல்லிவிட்டு தற்போது நானும், எதிரிகளும் ஒரே ஊர்காரர்கள் என்பதால் நான் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியில்லை.

மேலும் நான் அன்று மாலை 5.00 மணிக்கு இறந்துபோன பழனிசாமியின் அண்ணன் முருகேசன் பதற்றத்தோடு கரிலா தோட்டம் பக்கம் போய் கொண்டு இருந்ததையும், என் கணவர் முருகேசனை விசாரித்தாகவும், நானும் வீட்டுக்கு வந்த என் கணவரிடம் சண்டையை பற்றி சொன்னேன் என்றும், அதன் பிறகு கொஞ்சம் நேரத்தில் என் மச்சான் மனோகரனும், ஞானசேகரனும், பழனிசாமி மருந்து குடித்துவிட்டதாக சொல்லி ஒரு ஜீப்பில் பழனிசாமியை ஏற்றிக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு போனதாகவும், வழியிலேயே பழனிசாமி இறந்துவிட்டதாக நான் கேள்விபட்டேன் என்றும், போலிசார் விசாரணையில் நான் சொல்லிவிட்டு தற்போது நானும், எதிரிகளும் ஒரே ஊர்காரர்கள் என்பதால் நான் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியில்லை.

என்னை போலிசார் 17.2.2020ஆம் தேதி விசாரித்து என்னிடம் வாக்குமூலம் வாங்கியுள்ளார்கள் என்றும், நான் எதிரிகளை காப்பாற்றுவதற்காக போலிசார் என்னை

விசாரிக்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால், சரியில்லை.

<u>1, 2 மற்றும் 3ஆம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:

இல்லை.

N. MURALIDHARAN

Digitally signed by N. MURALIDHARAN
Date: 2025.06.25 13:20:10 +0530